

# MESSAGE TO HUMANITY

## HAZRAT KHALIFATHULLAH MUNIR AZIM AHMAD (A)

**31 March 2020**

**MESSAGE TO HUMANITY**

**மனித குலத்திற்கு ஓர் செய்தி**




தஷஹ்ஹுஉத் தஅவ்வுது மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதிய பிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை)** அவர்கள் பின்வரும் செய்தியை மனித குலத்திற்கு வழங்கினார்கள்.

**அஸ்ஸாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹி பர்க்காத்துஹு**

(அல்லாஹ்வின் கருணை, அமைதி மற்றும் அருள்கொடைகள் உங்கள் மீது இருக்கட்டும்)

**மனித குலம் ஆபத்தில் உள்ளது.** எனது அன்பான சகோதரர்களே, சகோதரிகளே, குழந்தைகளே, மனித குலம் ஆபத்தில் உள்ளது. இது ஒரு எச்சரிக்கை மட்டுமல்ல, நாம் அனைவரும் இப்போது வாழ்கிறோம் என்பது போல இதுவும் ஒரு உண்மையாகும். இந்த நூற்றாண்டின் அல்லாஹ்வின் தூதர் மற்றும் அல்லாஹ்வின் கலீ∴பா என்ற முறையில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இவ்வுலகம் பலவகையான ஆபத்தால் சூழப்பட்டுள்ளது என்பதை அல்லாஹ் எனக்கு அறிவித்துள்ளான். மனிதன், இயற்கை பேரழிவுகள் எனக்கூறும் இது போன்ற பலவகையான பேரழிவுகளையும், பலவகையான வைரஸ்களின் தோற்றத்தையும் நாம் கண்டிருக்கிறோம்.

அல்லாஹ் இரக்கமுள்ளவன் அல்லது மன்னிப்பவன் அல்ல என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். பலவகையான பேரழிவுகள் இன்று இந்த உலகத்தைத் தாக்கி வருகிறது என்றால், அது மனிதனின் கைகள் செய்த செயல்களின் விளைவாகும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். மனிதன் தனது சொந்த தீமைகளின் மூலம் தனக்கு அழிவை ஏற்படுத்திக்கொள்கிறான். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகிறான். **“மக்களின் கைகள் செய்த செயல்களினால் நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. இதனால் அவர்கள் தங்கள் தீய செயல்களிலிருந்து திரும்புவதற்காக”. (30 : 42)**

ஆனால் இது ஒரு இறை அடையாளமாக இருப்பது என்னவென்றால், இதுபோன்ற ஒரு பேரழிவு உலகத்தைத் தாக்கும் முன்பே, அல்லாஹ் அதை ஏற்கெனவே தனது தூதருக்குத் தெரிவிக்கின்றான், அதையொட்டி வரவிருக்கும் ஆபத்தைக் குறித்து அவர் உலகிற்கு எச்சரிக்கிறார். இதனால்தான் இது ஒரு இறை அடையாளமாக இருக்கிறது.

வைரஸ்கள் உட்பட எல்லா உயிரினங்களும் அல்லாஹவின் படைப்புகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வை மட்டும் வழிபடுவதற்கு பதிலாக மனிதன் அவனுக்கு இணைகளை வைத்து வழிபடுவதாக புனித குர்-ஆனில் அல்லாஹ் கூறுகிறான். படைப்பு அதாவது ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றை படைப்பது என்பது அல்லாஹ்வுக்கு மட்டும் உரியது என்று அல்லாஹ் தெளிவாக குறிப்பிடுகிறான். அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஓர்

விஞ்ஞானியினாலோ, பொய் கடவுளினாலோ ஒன்றுமில்லாததிலிருந்து எதையும் உருவாக்க முடியாது. எதை ஒன்றை படைக்கும் திறனும் ஆற்றலும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ளது. மனிதர்கள் பெருமை பேசும் அவர்களின் படைப்புகள் யாவும் தற்காலிகமானவை, பிற உதவியின்றி மனிதன் தனியாக உருவாக்கியவை அனைத்தும், அவை படைப்பு என்று ஒரு போதும் கூற இயலாது.

அல்லாஹ் திருக்குர்-ஆனில் கூறுகிறான்.

**“மக்களே! உங்களிடம் கூறப்படுவதைக் கவனமாக கேளுங்கள். நீங்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றீர்களோ, அவர்களால் ஓர் ஈயைக் கூடப் படைக்க முடியாது. அதற்காக அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் சரியே. இது மட்டுமன்றி, ஓர் ஈ அவர்களிடமிருந்து ஒரு பொருளைப் பறித்துச் சென்றால், அவர்களால் அதனிடமிருந்து அதனைக் கூட விடுவிக்க முடியாது. அழைப்போரும், அழைக்கப்படுவோரும் மிகப் பலவீனமானவர்களேயாவர். அவர்கள் அல்லாஹ்வை (அவனது பண்புகளை) கண்ணியப்படுத்த வேண்டியவாறு கண்ணியப்படுத்தவில்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக்க வலிமையுள்ளவனும், மிகைத்தேனுமாவான்”. (22 : 74, 75)**

கோவிட் - 19 என்னும் இந்த தொற்றுநோய் உலகை தனது முழங்கால்களுக்கு முன்கொண்டு வந்திருப்பதைப் போலவே, 20 –ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 1918 –ஆம் ஆண்டில் இது போன்ற ஒரு வைரஸ் தொற்று தோன்றியது. அது இந்தியா உட்பட உலகெங்கிலும் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் உயிர்களை பறித்தது என்பதை இக்காலத்தில் வாழ்ந்திருக்கும் நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வைரஸ்ஸை, ஸ்பானிஷ் வைரஸ் என அழைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து உயிர் பிழைத்தவர்களின் கண்களுக்கு முன்பாக அந்நிகழ்வு தீர்ப்பு நாளின் காட்சியைப் போல தென்பட்டது.

அல்லாஹ் உண்மையிலேயே மிக பெரியவன், இந்த உலகத்தை அபகரிக்க வரவிருக்கும் பேரழிவுகள் பற்றிய தகவலை ஏற்கெனவே அவனது தூதருக்கு அறிவித்திருந்தான். இறைவெளிப்பாடுகள் மூலம் இது பற்றிய

தகவல்களைப் பெற்ற பிறகு ஒரு இறைத்தூதருக்கு மட்டுமே இத்தகைய பேரழிவு ஒரு இறை அடையாளம் என்று உலகமக்களிடத்தில் அறிவிக்க முடியும். அல்லாஹ்வுடன் தொடர்பு இல்லாத, மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு இத்தகைய முக்கியமான அறிக்கைகளை அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்க ஒரு போதும் முடியாது. அல்லாஹ்வின் தூதராகவும் தனது காலகட்டத்தின் ஈமானை புதுப்பிப்பவராகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்ற தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளிலிருந்து இத்தகைய தீர்க்கதரிசனங்களை அதிகாரப் பூர்வமாக மானிட குலத்தை அறிவிக்க முடிந்தது. அதை போல இக்காலத்தில் நானும் அதிகாரப் பூர்வமாக தீர்க்கதரிசனங்கள் மற்றும் எச்சரிக்கைகளை மானிட குலத்திற்கு வழங்குவது, இந்த தாழ்மையான அடியானை அவனது தூதராகவும் கலீ∴பத்துல்லாவாகவும் அல்லாஹ் உயர்த்திக் கொண்டதனாலாகும். இந்த நூற்றாண்டில் பல்வேறு உலகளாவிய பேரழிவுகளை நாம் கண்டு வருகிறோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இது ஒரு நாட்டின் ஒரு பகுதியில் மட்டுமல்ல, மாறாக இது முழு உலகத்தையும் உள்ளடக்கிய ஒன்றாக மாறியிருக்கின்றது. இறைவெளிப்பாட்டின் ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ் இது குறித்து பல வெளிப்பாடுகளை எனக்கு வழங்கியிருந்தான். அவற்றில் ஒன்று 2010 ஜுன் 22 அன்று அல்லாஹ் எனக்கு வழங்கியிருந்தான். இது கிரயோள் (creole) மொழியில் நான் பெற்றிருந்தேன். அதன் வீடியோ ஆங்கில மொழிபெயர்புடன் எங்கள் இணையதளத்திலிருந்து உங்களுக்கு பெற முடியும், தயவுசெய்து அதைக்கேளுங்கள்.

************

மனிதகுலத்தை அழிக்க சீனா அனைத்து வகையான ஆயுதங்களையும் கண்டுபிடித்து வருகிறது. அதன் மக்கள் தொகை மிக அதிகரித்து விட்டது. மக்கள் தொகை அதிகரித்து விட்டதால் வீடு மற்றும் பிற வசதிகளில்லாமல் மக்கள் குழாய்களில் துங்குகிறார்கள். அவர்கள் பசியால் இறந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விலங்குகளை விட மோசமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அறியாமையின் காலம் சீனாவில் வந்தடைந்துள்ளது…

சீனாவின் பல பகுதிகளிலும் இந்தியாவிலும் பெரும் வறுமை நிலவுகிறது. இந்தியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் பலவற்றில் நீங்கள் காண்பீர்கள் ... அங்கெல்லாம் அறியாமையின் காலம் வந்துவிட்டது. எல்லா இடங்களும் அசுத்தங்களால் நிரம்பியுள்ளன. ஊழலும் மோசடியும் அதிகரித்து விட்டன.

**(2010 ஜுன் 22 –ம் தேதி பெற்ற இறைவெளிப்பாடுகளின் சுருக்க பகுதி - ஹஸ்ரத் கலீஃ.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் அலை)**

**மனிதகுலமே, எச்சரிக்கையாக இருங்கள், 2017 செப்டம்பர் 29 –ம் தேதியன்று எனது வெள்ளிக்கிழமை பேருரையில், ஆயிரக்கணக்கான மற்றும் மில்லியன் கணக்கான உயிர்களைப் பறிக்கும் ஒரு கொடிய வைரஸின் தோற்றத்தைப் பற்றி நான் உங்களுக்கு தீர்க்கதரிசனம் கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான பொருள்வகைகளை சேமிக்க நான் உங்களிடம் கூறியிருந்தேன். தயவுசெய்து அதை மீண்டும் ஒரு முறை கேளுங்கள்.**

************

**எனது முஸ்லீம் சகோதரர்களே, சகோதரிகளே – மனித குலமே, நீங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். உணவு பொருட்களை சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் வரவிருக்கும் சூழ்நிலைகள், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குள், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குள் உணவுப் பொருட்களால் நுழைய முடியாமல் போகலாம். ஆகவே உங்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை சேமித்து வைத்துக்கொள்ளுங்கள். வரவிருக்கும் ஆபத்தில் எச்சரிக்கையாக இருங்கள். உணவு பொருட்களின் தேவையைக் குறித்து அஞ்சாமலிருக்க நீங்கள் விழிப்புணர்வுடன் இருங்கள். ஏனெனில் அச்சூழலில் உங்களுக்கு எதுவும் கிடைக்கப் பெறாத நிலை தோன்றும். நாங்கள் எதற்காக அதிகமாக உணவு பொருட்களை வாங்கி சேமித்து வைக்க வேண்டும் என்றும் அவை காலாவதியை கடந்து பயனற்றுவிடும் என்றும் கூறாதிருங்கள். எதிர்காலத்தில் என்ன**

நடக்கப்போகிறது என்பதைக் குறித்து சிந்தியுங்கள். அது உங்களுக்கு தெரியாது. ஆனால் நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

மனிதனின் மரணத்திற்கு காரணமாகும் மற்றொன்றைக் குறித்து நான் உங்களுக்கு தெரிவிக்கிறேன். அது நோய்களாகும். மற்றொரு கொடிய வைரஸ் பூமியில் தோன்றும், அது எல்லா இடங்களிலும் அழிவை ஏற்படுத்தும். இந்த வைரஸால் பலர் இறப்பார்கள். இந்த வைரஸ் பற்றி மக்கள் கேள்விப்படுவார்கள், அதைப் பற்றி ஆராய்ச்சி செய்வார்கள். ஆனால், அதைப் பற்றி அவர்கள் ஆய்வு செய்து, அதற்கான மாற்று மருந்தைக் கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு நிர்வகிக்கப்படுவதற்கு முன்பே மில்லியன்கணக்கான மக்கள் இறந்திருப்பார்கள். இது தான் காலத்தின் முடிவின் உருவம் அதாவது இறுதி நாளின் அடையாளம். கியாமத் பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்கள். அது அனைவரும் ஒரே நேரத்தில் இறந்து மண்ணோடு மண்ணாகி விடும் ஒரு நாள் அல்ல. ஆயிரக்கணக்கான மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் இறக்கும்போது இது நிச்சயமாக அவர்களுக்கு ஒரு கியாமத் ஆகும்.

ஆகவே, எனது சகோதர சகோதரிகளே, உங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் அதிகமாக துஆக்களை செய்யுங்கள். உங்கள் தொழுகையை தவறாமல் கடைபிடியுங்கள். இது தவிர நபில் தொழுகைகளையும் செய்யுங்கள். அல்லாஹ்விடமான பிரார்த்தனைகளால் உங்கள் வாழ்கையை நிரப்புங்கள்.

மார்க்கத்தை நோக்கி திரும்புங்கள், திருக்குர்-ஆனை மேன்மேலும் படித்துக் கொண்டிருங்கள். தர்மம் செய்யுங்கள். அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவதற்காக பிரார்த்தனை மற்றும் நற்செயல்களை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். ஏனென்றால் இது மனிதகுலத்தை வெல்லும் ஒரு கடினமான சோதனையாகும். அப்பாவிகளும் பாதிக்கப்படுவார்கள்.

எனவே, அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தவும், அவனுடைய கோபத்தை ஈர்க்காமல் இருக்கவும் நம் வாழ்க்கையை நேர்மையான முறையில் மாற்றுவோம். மற்றனைத்தையும் விட தீனுடன் நமக்கு இணைந்திருப்போம். அல்லாஹ்விடம் நம்மை உறுதியாக இணைத்துக்கொள்வோம். இந்த பெரிய பேரழிவுகளிலிருந்து

**நம்மைக் காப்பாற்றும் சக்தி அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ளது. இன்ஷா அல்லாஹ்!**

**(2017 செப்டம்பர் 29 –ம் தேதியன்று ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ் நிகழ்த்திய பேருரையின் சுருக்கம்).**

**மனிதகுலமே, எச்சரிக்கையாக இருங்கள், 2017 செப்டம்பர் 29 –ம் தேதியன்று எனது வெள்ளிக்கிழமை பேருரையில், ஆயிரக்கணக்கான மற்றும் மில்லியன் கணக்கான உயிர்களைப் பறிக்கும் ஒரு கொடிய வைரஸின் தோற்றத்தைப் பற்றி நான் உங்களுக்கு தீர்க்கதரிசனம் கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான பொருள்வகைகளை சேமிக்க நான் உங்களிடம் கூறியிருந்தேன். தயவுசெய்து அதை மீண்டும் ஒரு முறை கேளுங்கள்.**

உலகத்தை முழங்காலில் வீழ்த்திய கோவிட் - 19 என்னும் இந்த தற்போதைய வைரஸின் விஷயத்தில் அல்லாஹ்விடமிருந்து தெளிவான வெளிப்பாடுகளைப் பெற்றபின், 2020 மார்ச் 27 –ம் தேதியன்று எனது வெள்ளிக் கிழமை பேருரையில் நான் கூறியிருந்தேன். மனிதன் இரண்டு நோக்கங்களுக்காக வைரஸ்ஸை உருவாக்க முற்படுகிறான் என்பதையும் நான் கூறிப்பிட விரும்புகிறேன். ஒன்று ஆராய்ச்சிக்காகவும் மற்றொன்று உலகை அழிக்கவும். குறிப்பாக போர் காலங்களில் உலகின் பிற பகுதிகளில் அதிகாரத்தைப் பெற அதை ஒரு உயிரியல் ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

உயிரியல் ஆயுதங்களை தயாரிப்பதில் முன்னேற்றமடைந்துள்ள அமெரிக்கா, சீனா மட்டுமல்லாமல், உலகின் பிற சக்திவாய்ந்த நாடுகள் ஏற்கெனவே 1918 –ம் ஆண்டில் கொலையாளியான ஸ்பானீஷ் வைரஸை மீண்டும் உருவாக்கியுள்ளன என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த வைரஸின் புனரமைப்பு 2005 –ம் ஆண்டில் டாக்டர் டெரன்ஸ் டம்பே என்ற விஞ்ஞானியால் நடந்தது. இந்த வைரஸ்களின் புனரமைப்புகள் தீங்கு விளைவிப்பதில்லை என்று இப்போது தோன்றலாம். ஆனால் இவை அனைத்திலும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், வரவிருக்கும் பேரழிவைப் பற்றியும், அலட்சியம் மற்றும் அறியாமையாலும் மனிதன் எவ்வாறு நெருப்புடன்

விளையாட முயற்சிக்கிறான் என்பதை பற்றியும் இவ்வாறு நெருப்புடன் விளையாடுவோர்கள் முடிவில் நெருப்புக்கே பலியாகி விடுவார்கள் என்பதை பற்றியும் அல்லாஹ் ஏற்கெனவே தனது தூதருக்கு அறிவித்திருக்கின்றான்.

ஆகவே, அன்பிற்குரிய மனித சமுதாயமே, சர்வவல்லமையுள்ள அந்த ஏக இறைவனுக்கு அஞ்சி, அவனை மட்டும் வணங்குவதன் பக்கம் திரும்புங்கள். நினைவில் கொள்ளுங்கள், அல்லாஹ் உங்களை தண்டிக்க உங்கள் சொந்த கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவான் அல்லது உங்களுக்கு எச்சரிக்கையாகச் செயல்பட அவன் முன்னோடியில்லாத விதமான தண்டனைகளை அனுப்பக்கூடும். இதனால் நீங்கள் சரியான பாதையில் திரும்பலாம். நேரம் உண்மையில் முக்கியமானதாகும். உங்கள் வழிகளைச் சீர்திருத்தி, எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் திரும்புங்கள். தீமை உங்களில் இடம்பெற விடாதீர்கள். நன்மை மற்றும் பிரார்த்தனைகளால் தீமையைத் தடுத்துக் கொள்ளுங்கள்.

இறைவனும் அவனுடைய தூதர்களும் யுகங்கள் முழுவதும் நமக்கு கற்பித்த தெளிவான வழிமுறைகளைப் பின்பற்ற நான் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் அறிவுறுத்துகிறேன். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **“தூய்மை என்பது நம்பிக்கையின் பாதி”** என்று ஏற்கெனவே நமக்கு கற்பித்திருக்கிறார். இஸ்லாத்தில் பரிந்துரைக்கப்பட்ட “வுளு” கூட அனைத்து முஸ்லீம்களுக்கும் உடல் ரீதியாக பாதிக்கக்கூடும் பல தீங்குகளுக்கும் எதிரான தடுப்பு நடவடிக்கைகள் ஆகும். நல்ல சுகாதாரத்தை எவ்வாறு வைத்திருப்பது என்பது குறித்த சரியான வழிகாட்டுதல்களை இஸ்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமக்கு கற்பித்துள்ளது. இந்த வழிமுறைகளை முஸ்லீம்களும் முழு மனிதகுலமும் பின்பற்றிக் கொண்டால், இந்த வகையான கொடிய வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். ஆனால் இவை அனைத்தும் பிரார்த்தனையுடனும், ஏக இறைவன் மீது உறுதியான நம்பிக்கையுடனும், தவறான எண்ணங்கள் மற்றும் தீமைகள் இல்லாத ஒரு புனிதமான வாழ்க்கை முறையுடனும் செய்ய வேண்டும்.

மனித குலத்திற்கும், அனைத்து முஸ்லீம்களுக்கும், எனது சீடர்களுக்கும் நான் வழங்கும் செய்தியானது, நீங்கள் ஒருபோதும் இந்த வைரஸை அஞ்சாதீர்கள். மாறாக நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் அவனிடம்

நேர்மையாக இல்லாவிட்டால் நீங்கள் அவனுடைய தண்டனைக்கு அஞ்சுங்கள். உங்கள் இதயங்களில் நீங்கள் மறைத்து வைத்திருப்பது அவனுக்கு மட்டுமே தெரியும். என் சீடர்களிடமிருந்தும், மனித குலத்திலிருந்தும் உண்மையுள்ளவர்கள் அதாவது, தங்கள் தொழுகையை தவறாமல் கடைபிடிப்பவர்களும், இறை வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அல்லாஹ்வின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்பவர்களும் இந்த வைரஸை அஞ்சத் தேவையில்லை. அல்லாஹ் உங்களை மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பானாக! இந்த உலகில் அவனுடைய மார்க்கத்தை பரப்புவதற்கு கடினமான உழைப்பை மேற்கொள்ளுபவர்களாக உங்களை மாற்றுவானாக! ஆமீன் சும்மா ஆமீன்.

கவனித்து கேட்டமைக்கு உங்கள் அனைவருக்கும் நன்றி

**அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹி பர்க்காத்துஹு**


**Translated by:**

**Naib Amir**

**Azim Ahmad**



**Editing & Publishing are done by**

***AMIR***

***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***

***TAMIL NADU***

**Ph No: 917502272774**